பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 16 வெள்ளிக்கிழமை (30.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 123

### வான் புலிகளின் தாக்குதலின் பின்னரான

# இலங்கையின் ஸ்திரமற்ற நிலைகுறித்து இந்தியப் பாதுகாப்புச் சபை ஆராய்வு

## பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடைபெற்றது

புதுடில்லி, மார்ச் 30

விடுதலைப் புலிகளின் 'வான் புலிகள்' நடத்திய விமானத் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கையில் தோன்றி உள்ள ஸ்திரமற்ற நிலை குறித்து -

இந்தியாவின் பாதுகாப்புச் சபையில் நேற்று நீண்ட நேரம் மிக விரிவாக ஆராயப்பட்டது.

இந்திய அமைச்சரவையின் பாதுகாப்புக் குழுவின் (CCS) மேற்படி கூட்டம் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் தலைமையில் இங்கு நடைபெற்றது.

வான் புலிகளின் தாக்குதலால் இலங்கையின் பாதுகாப்புக்கு முன்னெடுக்கப்படக் கூடிய மாற்றங்கள் -

அதேவேளை, இந்தியாவின் தமிழகத்தின் பாதுகாப்பு நிலைவரத்தில் உண்டாகக் கூடிய மாற்றங்கள் - குறித்து நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கலாம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், இது விடயத்தில் இந்தியா உடனடியாக அவசரப்பட்டு முடிவு எதனையும் மேற்கொள்ளாது. புதுடில்லியில் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாடு முடிவடைந்த பின்னரே இது தொடர்பாக கருத்தூன்றி ஆராயும் என்று மேலும் தெரிய வருகிறது.

நேற்றைய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், சார்க் உச்சி மாநாட்டுக்கு வரும் ஏனைய நாடுகளின் தலைவர்களுக்கு அதி உச்சப் பாதுகாப்பு வழங்குவது குறித்தும் கலந்தாலோசனை நடத்தப்பட்டது.

**கடற்புலிகள் நீர்மூழ்கி கட்டுகிறார்களா?**

இதேவேளை -

விடுதலைப் புலிகள் அமைப்புத் தங்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்று கண்டனப் பேரணி

கிளிநொச்சி, மார்ச் 30

மனிதநேயப் பணியாளர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்று கண்டனப் பேரணி இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் முற்பகல் 10 மணிக்கு அதன் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமான பேரணி, கிளிநொச்சி செயலகத்தை அடைந்தது.

செயலக முன்றலில் கழகத்தின் தலைவர்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக் கடலில் இரு தரப்பும் பல மணி நேரம் கடற்சமர்!

### சேதங்கள் குறித்து முரண்பட்ட தகவல்கள்

கொழும்பு, மார்ச் 30

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே பலமணி நேரம் கடற்சமர் இடம்பெற்றிருக்கிறது. புதன்கிழமை இரவு 10.00 மணிக்குப் பிறகு முல்லைத்தீவு - அளம்பில் இடைப்பட்ட கடலில் மூண்ட சமர் நேற்று விடிகாலை 1.00 மணிவரை நீடித்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக்கடற்சண்டை தொடர்பாககடற்படையினரும் விடுதலைப்புலிகளும் வெவ்வேறு விதமான தகவல்களை வெளியிட்டிருக்கின்றனர்.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை கடற்படை சுட்டு நான்கு தமிழக மீனவர் உயிரிழப்பு

இராமேஸ்வரம், மார்ச் 30

இலங்கை கடற்பரப்பில் நேற்று மீன் பிடித்துக்கொண்டிருந்த கன்னியாகுமரியைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது 4 மீனவர்கள் கொல்லப்பட்டனர்; இருவர் காயமடைந்தனர் என்று பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் நேற்றிரவு அறிவித்தது.

ஆறு மீனவர்கள் மீன் பிடித்துக்கொண்டி

(03 ஆம் பக்கம் பார்க்க)

## சு.கவின் தீர்வு யோசனை இன்று மத்திய குழுவிடம்

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசனை வரைவு இன்று அல்லது நாளை கட்சி மத்திய குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னரே ஆலோசனை வரைவு சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு ஒப்படைக்கப்படும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

ஸ்ரீல.சு.கட்சியின் இனப்பிரச்சினை தீர்வுக்கான ஆலோசனை வரைவு சமர்ப்பிக்கப்பட்டதும் சர்வகட்சி பிரதிநிதிகளின் கூட்டம் கூட்டப்படும் என்றும் அவர் சொன்னார். (சி)

## பெற்றோல் விலை 7 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 30

பெற்றோல் விலை நேற்று நள்ளிரவு முதல் 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை கொழும்பில் 104 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இது இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது எரிபொருள் விலை அதிகரிப்பாகும்.

இதேவேளை - இந்திய ஒயில் நிறுவனமும் நேற்று நள்ளிரவு முதல் பெற்றோலின் விலையை 7 ரூபாவால் அதிகரிக்க இருப்பதாக அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் கே. இராமகிருஷ்ணன் தெரிவித்தார். (அ-ரி)

## புலிகளின் வான் தாக்குதல் ஆபத்து: கட்சிகளின் குழுக் கூட்டத்தை கூட்டுக!

### அநுரா சபாநாயகருக்குக் கடிதம்

கொழும்பு, மார்ச் 30

விடுதலைப் புலிகள் நாடாளுமன்றம் மீது வான்தாக்குதலை நடத்தக்கூடும். எனவே, உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது குறித்து ஆராய்வதற்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யவும்.

இவ்வாறு சபாநாயகரைக் கோரியுள்ளார் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க.

இது தொடர்பாக சபாநாயகருக்கு அமைச்சர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கட்டுநாயக்க விமானப்படைத் தளம்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு பற்றி ஆராயும் அவசியம் ஏற்பட்டிருப்பதாக அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிக்கின்றார்.

விடுதலைப் புலிகள் இந்த இலகுரக விமானங்களைப் பயன்படுத்தி வேறு இலக்குகள் (03 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழக சட்டசபையில்

## ஈழத்தமிழர் விவகாரம் குறித்து நேற்று சூடான விவாதம்; எம்.எல்.ஏக்கள் மோதல்

சென்னை, மார்ச் 30

ஈழத்தமிழர் நிலை குறித்து தமிழக சட்டசபையில் நேற்றுச் சூடான விவாதம் இடம்பெற்றது. விவாதத்தின் போது உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் அடிபட்டு மோதும் அளவுக்கு நிலைமை மோசமாகியது. எனினும் அது ஒருவாறு தவிர்க்கப்பட்டது.

தமிழக வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதம் நேற்று இடம்பெற்றபோது, ம.தி.முகவின் உறுப்பினர் (எம்.எல்.ஏ.) வீர இளவரசன் இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து உரையாற்றினார்.

இலங்கையில் தினமும் தமிழர்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கு கொலை, கொள்ளை, கற்பழிப்பு என தினமும் சம்பவங்கள் நடக்கின்றன. அங்கிருந்து வரும் அகதிகளை பாதுகாக்கும் உணர்வு சகலருக்கும் ஏற்பட வேண்டும் - என்று அவர் தமது உரையில் கூறினார்.

அவரது உரையின்போது (03 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவரைக் கடத்திப் படைக்கு சேர்ப்பது குறித்து அரசு பாராமுகம் என்று மீண்டும் குற்றச்சாட்டு

நியூயோர்க், மார்ச் 30

''இலங்கை அரசுடன் சேர்ந்து இயங்கும் கருணாகுழு சிறுவர்களைக்கடத்தி, பலவந்தமாகப் படைக்குத் திரட்டி வரும் நடவடிக்கை குறித்து அரசு பாராமுகமாக இருந்து வருகின்றது. இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என இலங்கை அரசுத் தரப்பில் வழங்கப்பட்ட உறுதிமொழி காற்றில் பறக்கவிடப்பட்டிருக்கின்றது.''

- இவ்வாறு இலங்கை அரசைக் கடுமையாகச் சாடும் குற்றச்சாட்டு ஒன்றை மீண்டும் சுமத்தியிருக்கின்றது நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் (Human Rights Watch) என்ற அமைப்பு.

நேற்று அந்த அமைப்பு விடுத்த அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

''அரசு சார்புடைய கருணா குழு சிறுவர்களைக் கடத்துவது குறித்து விசாரணை (03 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாகுழுவுடன் இணைந்து கிழக்கில் படையினர் தேடுதல்

### ஐ.தே.க.வெளியிடும் தகவல் இது!

கிழக்கில் அரச படையினர் கருண குழுவினருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக்கட்சி தகவல் வெளியிட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான சரத்ரணவக்க இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

''யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் பிரபாகரனுடன் பயங்கரவாதப் பட்டியலில் கருணாவும் இருக்கின்றமை தெரியவந்தது. அத்தகைய கருணாவின் அணியினருடன் அரசுப் படைகள் இணைந்து கிழக்கில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்'' - என்றார் அவர். (சி)

## பத்திரிகை அச்சுத்தாள் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும்

கொழும்பு, மார்ச் 30

யாழ்ப்பாண ஊடகங்கள் எதிர்நோக்கியுள்ள செய்தி அச்சுத்தாள்களுக்கான தட்டுப்பாடு விரைவில் நீக்கப்படும். அவற்றைக் கப்பலில் ஏற்றி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இந்தத் தகவலை ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடக நிறுவனங்கள் எதிர்நேக்குகின்ற அச்சுத்தாள்களுக்கான தட்டுப்பாடு குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவற்றைக் கப்பல்மூலம் அனுப்புவதற்கா... நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலில் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்களின் கையிருப்பு குறித்தே அரசு கவனம் செலுத்தியது. அவற்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதிலேயே அரசு குறியாயிருந்தது.

இப்போது அங்கு போதுமான உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருக்கின்றன என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அங்கு நிலவும் அச்சுத்தாள்களுக்கான தட்டுப்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மிக விரைவில் அவை கப்பலில் அனுப்பப்படும் - என்றார். (அ-சி)

## பழைய முறிகண்டியில் கிளைமோர்; போதுமகன் பலி; ஒருவர் காயம்!

### ஆழ ஊடுருவும் அணியினர் கைவரிசை

கிளிநொச்சி, மார்ச் 30

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி மாவட்டம் பழைய முறிகண்டிப் பகுதியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளை

(03 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் முகாம்மீது ஷெல் வீச்சு!

மன்னார் - முருங்கன் பகுதியில் உள்ள படையினரின் முகாம் ஒன்றின்மீது நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதல் மேற்கொண்டனர் என்று தேசியப் பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது.

இந்த சம்பவத்தின்பின்னர் படையினரும் பதில் தாக்குதல் மேற்கொண்டனர் என்றும், புலிகளின் தாக்குதலினால் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்றும் ஊடக நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# COMPUTER EXPRESS
Institute of Information Technology
Head Office : 15, Sirambiyadi Lane, Off Stanly Rd, Jaffna.
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna.
TP No : 021 222 8250 , 0777 222 422

## மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007

பதிவுகளிற்கு முந்துங்கள்

80% OFF

| பாட நெறிகள் | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 1,450 |
| MS Office | - 3 மாதம் | 1,000 |

50% Off
Advance Courses
Diploma in Video Editing 3250
Diploma in Multimedia 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 30/03/2007
Batch II - 31/03/2007
Batch III - 01/04/2007
Batch IV - 04/04/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.


## தவறிவிட்டது

அமுதலிங்கம் நாகரத்தினம் என்பவரது தே.அ.அட்டை (588323439V), விசேட அ.அட்டை என்பன யாழ்.நகருக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.51, பலாலிவீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## தவறிவிட்டது

கந்தசாமிப்பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த நடராஜாபிள்ளை யோகேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (536054316V), விசேட அடையாள அட்டை அடங்கலான பேர்ஸ் சீனி அம்மன் கோவிலுக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் அல்லது கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

லோ.கெங்காதரன்,
சண்டிலிப்பாய் மேற்கு,
சமுர்த்தி
அலுவலகம்.

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விய வருடம் பங்குனித் திங்கள் 18ஆம் நாள் (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.52 மணிமுதல் 10.43 மணிவரை உள்ள உத்தர நட்சத்திர இடப லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்



எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**ஜெகன்**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சுபத்திரா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மண மக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு. திருமதி சிங்கராசா தம்பதிகள்
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

திரு. திருமதி பொ.பாஸ்கரன் தம்பதிகள்
பொன் அகம், சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை (பரிமளா ஸ்ரோஸ்)
தொ.பே.: 222 2974

(இரு வீட்டார் அழைப்பு) (59109)

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 ★ 05 ★ 1926



மறைவு
15 ★ 03 ★ 1992

**அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்**

திதி: 30.03.2007

எங்கள் இதயக்கோயிலின் இதயதீபம்
அணைந்து பதினைந்து ஆண்டுகள் ஆனாலும் - பப்பா
உங்கள் நினைவு என்றும் பசுமையாகவே இருக்கும்.

உங்கள் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (58991)






## கேள்வி கோரல்
## போதனா வைத்தியசாலை மின்சார பராமரிப்பு

போதனா வைத்தியசாலையில் 01.06.2007இல் இருந்து 31.05.2008 வரைக்கும் மின்சார பராமரிப்பு சம்பந்தமாக பதிவுடைய ஒப்பந்தகாரரிட மிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங் கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினம் 15.04.2007 முற்பகல்10 மணி வரைக்கும்.

கேள்விப்பத்திரங்களை 05.04.2007 வரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் பராமரிப்பு சம்பந்தமான கடமைகளும் நிபந்தனைகளும் கேள்விப் பத்திரத்துடன் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்களை 05.04.2007 இற்கு முன்பு 4,500/= மீளளிக்கக் கூடிய பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

(அ/55887)

- பணிப்பாளர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28~12~1977
மறைவு
10~04~2006

அமரர்
**செல்வேந்திரா பிரதீப்குமார்**

திதி: துவாதசி (30.03.2007)

அண்ணா! என்றழைக்க,
அருகில் நீ இல்லாது
ஆண்டொன்று மறைந்தாலும்
எந்நாளும் உந்தன் மதிமுகத்தை
எம்முள் நாம் கண்டு
எதிர்பார்த்து வாழ்கின்றோம்
என்றாவது ஒரு நாளில்
எம் வாசல் நீ வந்து மீண்டும்
உறவாட மாட்டாயோ என:...

பங்களா லேன், மல்லாகம். தகவல்: பிரசன்னா (தம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.நு.: 222 9944

## வான் புலிகளின் தாக்குதலால் பிரசார உத்தியில் தடுமாற்றம்

விடுதலைப்புலிகளின் 'வான் புலிகள்' படையணி நடத்திய முதலாவது விமானத்தாக்குதல் பற்றிய செய்தியை - தகவலை - எவ்வாறு கையாள்வது என்பதில் அரசுத் தலைமைக்கு மிகுந்த நெருக்கடி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தடுமாறும் விடயமாகிவிட்டது இது.

நாடு தேசிய இனப்பிரச்சினையில் சிக்கிச் சீரழிந்து போயிருக்கின்றது. இவ்விடயத்துக்கு விரைந்து நீதியான - நியாயமான - நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய - ஸ்திரமான - ஒரு தீர்வைக் காண்பதற்காகப் பாரபட்சமற்ற முறையில் செயற்படவேண்டிய அரசுத் தலைமை, அதை விடுத்து - அதற்கு முரணாக தனது வாக்கு வங்கியான தென்பகுதி பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளை அரவணைத்து, அவற்றுக்கு விருப்பமான - பிடித்தமான - காரியங்களை முன்னெடுப்பதிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றது.

நாட்டை உலுப்பும் தேசியப் பிரச்சினையான இனச்சிக்கலுக்கு முடிவு கட்டும் ஒரு தீர்வைக் காண்பதை விட, பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்தி, அவர்களின் ஆதரவைத் தன்பக்கம் தக்கவைத்து, உறுதிப்படுத்துவதில் மட்டுமே அரசுத்தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அணியினரும் சிரத்தையாக இருக்கின்றார்கள். அவர்களது அண்மைக்கால அரசியல், ராஜதந்திர மற்றும் இராணுவக் காய் நகர்த்தல்கள் எல்லாம் அதனையே இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது துலாம்பரம்.

கடந்த பல மாதங்களாகக் கிழக்கின் பல படை நடவடிக்கைகளையும், இராணுவ முன் நகர்வுகளையும் மேற்கொண்டு, தமிழர் தாயகத்தில் பல பிரதேசங்களை ஆக்கிரமித்து, அவற்றைப் பெரும் இராணுவ வெற்றிகளாகத் தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்குக் காட்டி, அவர்கள் மத்தியில் ஆரவார வரவேற்பையும், ஆட்சித்திறன் பற்றிய பாராட்டுக்களையும் பெற்று வந்தது மஹிந்தரின் அரசுத்தலைமை. தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை, விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் முற்றாக அடக்கி ஒடுக்குவதன் மூலம் ஜனாதிபதி மஹிந்தர் தீர்த்துக்கொள்வார் என்ற அசட்டு நம்பிக்கையை தென்னிலங்கைச் சிங்களத்தின் மனதில் வேரூன்ற வைத்தது இந்த அரசு.

புலிகள் இனிமேல் செல்லாக்காசு, அவர்கள் தொலைந்த சக்தி (Lost Force)என்றெல்லாம் கூட படம் போட்டுக்காட்டும் வேலையும் நடந்தது.

ஆனால் அத்தகைய கருத்துருவாக்கங்களுக்கு அடிபோல - இடிபோல - வந்திறங்கியிருக்கிறது புலிகளின் விமானத்தாக்குதல்.

ஒருபுறம் தென்னிலங்கையில் இதுவரை கட்டி எழுப்பப்பட்டுவந்த இராணுவத்தீர்வு நம்பிக்கைக் கோட்டையை அது தகர்த்துவிட, மறுபுறம் இனி என்ன என்பது பற்றிய ஒரு பயப்பிராந்தியையும் - அச்சத்தையும் - கூட இந்நடவடிக்கை கிளப்பிவிட்டிருக்கின்றது.

ஐ. தே. கட்சியிலிருந்து அரசுப்பக்கம் அணி தாவி அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்ட ராஜித சேனாரட்ன கூறுகின்றமைபோல, புலிகளின் இந்த வான் தாக்குதலை ஒரு மிகச்சிறிய - அற்பமான - விடயமாக (minior matterஆக) காட்டி ஒதுக்கி விடுவது அப்படி ஒன்றும் சிரமமான காரியமே அல்ல. அவ்வாறு பிரசாரப்படுத்தி சிங்கள மக்களை நம்ப வைத்து, அதன்மூலம் அரசுப் படைகளின் இராணுவ வெற்றி தொடர்பாக தெற்கில் நிலவிவந்த அதீத நம்பிக்கைக் கனவைச் சிதறடிக்காமல் பார்த்துக்கொள்ளலாம். அது, அரசாலும் அதன் தந்திரோபாயப் பிரசார இயந்திரங்களாலும் இலகுவாக மேற்கொள்ளக்கூடிய விடயமே.

ஆனால் அதில் இரண்டு சிக்கல்கள் உள்ளன.

ஒன்று - உண்மையிலேயே, உலகில் ஒரு கிளர்ச்சி அமைப்பிடம் - சட்டரீதியான நாட்டுக்குரிய அந்தஸ்தைப் பெறாத ஒரு விடுதலைப் போராட்ட இயக்கத்திடம் - தனி விமானப்படையும், வான் வழித்தாக்குதல் ஆற்றலும் இருப்பது இலகுவில் அற்பமான விடயமாக ஒதுக்கித்தள்ளிவிட முடியாததாகும். விபரீத விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வலிமை தம்மிடம் உள்ளது என்பதை வெளிப்படுத்தி, நிரூபித்துப் புலிகள் காட்டும்போது அதனை சுலபமாகப் புறமொதுக்கி விடமுடியாது.

அடுத்தது - புலிகள் தம்மிடம் இந்த வலிமை இருப்பதை வெளிப்படுத்திய சூழலில், அதற்கு எதிராக சர்வதேசத்தைத் திரளவைத்து சர்வதேச உதவியுடன் அந்த ஆபத்தை எதிர்கொண்டு சமாளிப்பதாயின் - அல்லது முறியடிப்பதாயின் - புலிகளின் இந்த வலிமை பற்றிய நிதர்சனத்தை ஒப்புக்கொண்டு, அதனை சர்வதேசத்துக்கும் பகிரங்கப்படுத்த வேண்டியது தவிர்க்கமுடியாதது. கிடைத்த இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சர்வதேச சமூகத்தைப் புலிகளுக்கு எதிராக ஒன்றுபட வைத்துத் திருப்பிவிடவேண்டும் என்றால், - தேவைப்படும் சமயத்தில் புலிகளின் வான் வழித்தாக்குதல் பலத்தை மிகைப்படுத்தியும் பிரசாரப்படுத்த வேண்டும் என்ற தந்திரமும் அரசுத் தலைமைக்குப் புரிகிறது.

ஒருபுறம் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் 'புலிகளின் வலுவை உடைத்து, முதுகை முறித்து, அவர்களின் பலத்தைக் குன்றச் செய்தாகி விட்டது' எனக் காட்டும் அரசியல் இலக்குடன் கூடிய முனைப்பு.

மறுபுறம், புலிகளின் வான்வழித்தாக்குதல் வலிமையை மிகைப்படுத்திக் காட்டி அதற்கு எதிரான சர்வதேச ஆதரவைத் திரட்டும் யதார்த்தத் திட்டம்.

இவற்றுக்கு நடுவிலேயே 'இரண்டுங்கெட்டான்' போக்கில் விடயத்தைக் கையாளவேண்டிய சிக்கல் அரசுக்கு.

*''விடுதலைப் புலிகள் தமது இராணுவப் பலத்தை - போரியல் சக்தியை - வான் தாக்குதல் மூலம் மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கின்றனர். கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் புலிகள் பின்வாங்கிச் சென்றதன்மூலம் சில பகுதிகளை அரசுப்படைகள் கைப்பற்றியிருந்தன. அதனை அரசு தனக்குக் கிடைத்த பெரு வெற்றியாகக் கொண்டாடியது. புலிகள் பலமிழந்து விட்டனர் என்று பறைசாற்றியது. புலிகளின் பின்வாங்கல்கள் யுத்த தந்திரோபாய நோக்கம் கொண்டவை என்பதை சம்பந்தப்பட்டோர் - இப்போதாவது - இனியாவது - புரிந்து கொள்ளட்டும்.''*- என்று பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டிருந்தமையும் இங்கு கவனிக்கப்படவேண்டியது.

யுத்தத்தின் போக்குப் பற்றிய உண்மைகளை மக்களுக்குத் தெரியாமல் தடுப்பதானால் - அல்லது தவறான நம்பிக்கைகளை மக்களுக்கு ஊட்டுவதானால் - ஒரு சமயத்தில் தங்களின் தவறான பிரசாரத்துக்கு தாங்களே இரையாகும் இக்கட்டு உருவாகலாம் என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்வது நல்லது.

# ஜனாதிபதி வழங்கிய நிதிமூலமே புலிகள் வான்படைப் பலம் பெற்றனர்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு, மார்ச் 30

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலிகளுடன் செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தத்தின்மூலம் வழங்கப்பட்ட பெருந்தொகையான பணத்தைக்கொண்டே புலிகள் கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீது தாக்குதலை நடத்தியிருக்கின்றனர் என்று ஐ.தே.கட்சி குற்றஞ்சுமத்தியுள்ளது.

புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்படி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு 70 கோடி ரூபாவையும் தேர்தலுக்குப்பின்பு 80கோடி ரூபாவையும் மஹிந்த புலிகளுக்கு வழங்கியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது என்று ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

நேற்று எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியாக பூர்வ அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தத்தின் மூலமே புலிகள் பலம் பெற்றிருப்பதாக அரசு தெரிவிக்கின்றது. ஆனால் அது முற்றிலும் தவறு.

**புலிகளின் வலிமை**

புலிகள் கிளிநொச்சியில் இருந்து விமானத்தின் மூலம் இங்கு வந்து கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தை தாக்கிவிட்டு மீண்டும் கிளிநொச்சிக்குத் திரும்பிச் சென்றுள்ளார்கள் என்றால் அவர்களின் வலிமை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? இது நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல்.

புலிகள் பலம் பெற்றிருப்பதாகவும் அவர்களிடம் விமானப் படைத்தளம் இருப்பதாகவும் சமீப காலமாக ஊடக அமைப்புகள் தெரிவித்து வந்த போதிலும் எதுவித முன்னெச்சரிக்கையும் இன்றி அரசு செயற்பட்டமை மிகவும் வருந்தத்தக்கது.

- இவ்வாறு கயந்த கருணாதிலக தெரிவித்தார். (ஐ)

## கணவன் - மனைவி இருவரும் வீட்டில் வைத்து இரவில் சுட்டுக்கொலை

### பேர்த்தியை அணைத்தவாறு 2 வயதுக் குழந்தை

யாழ்ப்பாணம்,மார்ச் 30

உரும்பிராய் வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கணவன், மனைவி ஆகியோர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் ஊரடங்கு வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உரும்பிராய் வடக்கு, கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் வசித்து வந்த மாவிட்டபுரம், கொல்லன் கலட்டியைச் சேர்ந்த வைரமுத்து சிவகணேசதாஸன் (வயது 59), அவரது மனைவியான மாத்தளையைச் சேர்ந்த சி.சுறோஜினி (வயது 54) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

நேற்றுமுன்தினம் இரவு இவர்களது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற ஆயுததாரிகள் கணவன், மனைவி இருவரையும் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலையுண்டவர்களது வீட்டிற்கருகே வேறு வீடுகள் இல்லாததால், கொலைகள் நடந்தமை நேற்றுக்காலை விடிந்தபிறகே அயலவர்களுக்குத் தெரியவந்துள்ளது.

கொல்லப்பட்ட சிவகணேசதாஸன் ஒரு பெரும் வர்த்தகர் என்றும் அவருக்கு சொந்தமான இரண்டு வாகனங்கள் கொலைகள் நடைபெற்ற வீட்டில் காணப்பட்டன.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை மேற்கொண்டார். பிரஸ்தாப குடும்பத்துடன் வசித்துவந்த அவர்களது இரண்டு வயதான பேரப்பிள்ளை இரவு முழுவதும் உயிரிழந்த தமது பேர்த்தியை அணைத்தவாறு அழுதுகொண்டிருந்தது.

நேற்றுக்காலை சம்பவத்தைக் கேள்விப்பட்டு அங்கு சென்று குழந்தையை அவரின் தந்தை மீட்டார் என்ற விவரம் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அக்குழந்தை இறந்தவரின் மகளின் குழந்தை என அறியவந்தது.

கொலையுண்ட பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக்கொடி மற்றும் வீட்டில் இருந்த நகைகளும் வந்தவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டன என்றும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் பின் பிரேத பரிசோதனை முடிந்தபின் சடலங்களை உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (1-4-8-68)




## ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா வெற்றி

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'சுப்பர் 8' ஆட்டங்களில் தென்னாபிரிக்கா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் வெற்றியீட்டியுள்ளன.

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கிடையில் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. இதில் திலகரட்ண டில்ஷான் 58 ஓட்டங்களையும் ரஸல் ஆர்னால்ட் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 48.2 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜக் கலிஸ் 86 ஓட்டங்களையும், கிறேன் சிமித் 59 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தப் போட்டியில் 4 பந்துவீச்சில் 4 விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாகக் கைப்பற்றியதன் மூலம் லசித் மாலிங்க புதிய உலக சாதனையை நிலைநாட்டினார். சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றில் நான்கு பந்துகளில் 4 விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாகக் கைப்பற்றப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்.

ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த போட்டியில் ஆஸ்திரேலிய அணி 103 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 322 ஓட்டங்களைப் பெற்றது. ஹைடன் 158 ஓட்டங்களைப் பெற்றார்.

மழை காரணமாக கடந்த 27ஆம் திகதி கைவிடப்பட்டு நேற்றுமுன்தினம் மீண்டும் துடுப்பெடுத்தாடிய மே.தீவுகள் அணி 45.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அணித்தலைவர் பிறையன் லாரா 77 ஓட்டங்களைப் பெற்றார்.

**இன்றைய ஆட்டம்:** ★ அயர்லாந்து எதிர் இங்கிலாந்து

## இலங்கையின் ஸ்திரமற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் 'கடற்புலிகள்' கடற்படைக்கு மினி நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றைக் கட்டி வருகிறார்கள் என்ற சந்தேகமும் இந்தியாவின் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் வட்டாரங்களில் பரவலாக நிலவுகிறது.

இது குறித்து, புதுடில்லியில் உள்ள இந்தியக் கடற்படைத் தலைமையகத்தைச் சேர்ந்த உதவிப் பிரதம கடற்படை அதிகாரி நியல் அட்மிரல் பிரதீப் சுஹாவிடம் கேட்டபோது - அது சாத்தியமில்லை என்று முற்றாக மறுக்கவில்லை.

அப்படி ஒரு நிலைமை உருவானால், பயங்கரவாதிகளால் நிலத்தில் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் போன்று கடற்பிராந்தியத்திலும் ஏற்படலாம் - என்றார்.

நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டுவதும் அவற்றை இயக்குவதும் இலகுவான ஒன்றல்ல. பல்துறைசார் செயற்பாடுகள் தேவை.

கையேடுகளை (Manuals) புரட்டிப் பார்த்தும், படித்தும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டிவிடமுடியாது - என்றும் அவர் கூறினார்.

பாக்குநீரிணையிலும் அதனை அண்டியுள்ள கடற்பிராந்தியங்களிலும் கண்காணிப்பும், கடல் ரோந்தும் அதிகரிக்கப்பட்டும் தீவிரமாக்கப்பட்டும் உள்ளது - என்றும் நியல் அட்மிரல் பிரதீப் மேலும் சொன்னார்.

## இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த வேளை, அங்கு வந்த கடற்படையினர் எச்சரிக்கை எதுவுமின்றி துப்பாக்கிப்பிர யோகம் செய்தனர்.

ஆறு மீனவர்களில் 2 மீனவர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். காயமடைந்த மற்றும் இரண்டு மீனவர்கள் கடலில் வீழ்ந்து மூழ்கிவிட்டனர். மற்றைய இரு மீனவர்களும் காயங்களுடன் கன்னியாகுமரி வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சின்னத்துறையில் இருந்து மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று அதிகாரிகள் கூறியதாக பி.ரி.ஐ.மேலும் தெரிவித்தது. (அ-1)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கக் கூடும்.

இதனால், நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் பாதுகாப்புக்கும் ஆபத்து இருக்கிறது - என்று அநுரா தமது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.(அ-ரி)

## ஈழத்தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறுக்கிட்ட, காங்கிரஸ் உறுப்பினர்கள் பலர் எதிர்ப்புக் குரல் எழுப்பினர். அதனைத் தொடர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் ம.தி.மு.க. உறுப்பினர்களுக்கும் இடையில் காரசாரமான வாய்த்தர்க்கம் இடம்பெற்றது.

ம.தி.மு.க உறுப்பினருக்கு ஆதரவாக அ.தி.மு.க. உறுப்பினர்களும் குரல் கொடுக்க சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் ம.தி.மு.க. உறுப்பினர்களுக்கும் இடையில் மோதல் உருவாகும் நிலை ஏற்பட்டது.

இருதரப்பினரும் ஆவேசத்தில் கையை மடக்கிக் கொண்டு குத்துவது போல் ஒருவர் மேல் ஒருவர் பாய முற்பட்டனர். அருகில் இருந்த உறுப்பினர்கள் அதைத் தடுத்து நிறுத்தி அடிதடியை தவிர்க்க உதவினர். (அ-1)

## நாளை

பங்குனி - 17
சனிக்கிழமை
31.03.2007
திதி: திரயோதசி
முன்னிரவு : 07.11
நட்சத்திரம்: பூரம்
பின்னிரவு : 03.13
சுபநேரம் : 03.12 - 04.42
ராகுகாலம் : 09.12 - 10.42

## பழைய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோர் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் நடந்த இந்தத் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர் எனவும் - பின்னர் இருவரும் கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது சிகிச்சை பலனின்றி அங்கு ஒருவர் மர[illegible] (சி)

## வண்ணை சிவனுக்கு நாளை தேர்த்திருவிழா

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று காலை 9 மணிக்கு பஞ்சரத பவனி நடைபெறும். நண்பகல் ஒரு மணிக்கு பஞ்சமூர்த்திகள் வசந்தமண்டபத்தை அடைவர்.

நாளை காலை 5 மணிக்கு நடராஜர் அபிஷேகமும் முற்பகல் 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (அ-1)

## இருவரைக் காணவில்லை; ஆணைக்குழுவில் முறைப்பாடு

கரவெட்டி மற்றும் நாவலர் வீதியைச் சேர்ந் இருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த சிவலிங்கம் இந்திரன் (வயது 34) என்பவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலையில் இருந்து வந்தார். கடந்த 19ஆம் திகதி தனது வீட்டிலிருந்து யாழ். நகருக்கு சென்றார். அதன் பின்னர் அவர் காணாமற்போயுள்ளார் என்று அவரது மனைவி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். நாவலர் வீதியைச் சேர்ந்த இலட்சுமணன் நிஷாந்தன் (வயது - 24) என்வர் கடந்த 28ஆம் திகதி வீட்டில் இருந்து தமது சொந்த வாகனமான ஹைஏஸ் வானில் சென்றார் என்றும் அவர் பயணம் செய்த வான் தட்டாத்தெரு சந்தியில் அநாதரவாகக் காணப்பட்டது என்றும் அவருக்கு என்ன நடந் தது என்று எதுவும் தெரியவில்லை என உறவினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

## முல்லைக் கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சண்டையில் தாங்கள் விடுதலைப் புலிகளின் மூன்று படகுகளை மூழ்கடித்து, குறைந்தது 15 கடற்புலி உறுப்பினர்களைக் கொன்றுள்ளனர் என்று கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையின் ரோந்து அணி ஒன்று குறைந்தது 10கடற்புலிப் படகு களால் வழிமறிக்கப்பட்டபோது இச்சமர் ஏற்பட்டது. கடற்படைப் படகு கள், புலிகளின் படகுகள் மீது கடுந்தாக் குதல் தொடுத்தன. அச்சமயம் புலிகளின் மூன்று படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இந்தச் சண்டையின்போது 15முதல் 18 வரையான புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என நம்புகிறோம் - என்று கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் அதுல சேனாரத்ன, ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

இதேவேளை -

குறைந்தது 23 டோராப் படகுகளில் வந்த கடற்படையினர் - தாக்குதல் நடத்தியவாறு தமது கட்டுப்பாட்டுக் கடற்பிரதேசத்தினுள் பிரவேசிக்க முயன்றனர் - என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் கிளிநொச்சியில் தெரிவித்திருக்கிறார்.

முல்லைத் தீவுக்கும் அளம்பிலுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் புதன் கிழமை இரவு 10 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினரின் 23 டோராப் படகுகளைக் கொண்ட அணி கடற்பரப்பில் முன்னோக்கி வந்தது-

முன்னோக்கி வந்த டோராப் படகுகளின் அணிக்கு எதிராக கடற்புலிகள் நடத்திய முறியடிப்புத் தாக்குதல் நேற்று அதிகாலை 1.00 மணிவரை நீடித்தது. கடற்புலிகளின் தீவிர முறியடிப்புத் தாக்குதலில் இரு டோராப் பீரங்கிப் படகுகள் கடுமையாக சேதமடைந்துள்ளன -

இதனையடுத்து ஸ்ரீலங்கா கடற்படையினரின் ஏனைய டோராப் படகுகள் சேதமடைந்த படகுகளை இழுத்துக் கொண்டு பின்வாங்கி ஓடின -

டோராப் படகுகளின் அணியினை திருகோணமலை வரைக்கும் கடற்புலிகள் விரட்டியடித்துள்ளனர்.

இம்முறியடிப்புச் சமரில் கடற்புலிகளின் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார் - என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே அளம்பில் கரையோரப் பகுதிகள் மீது கடற்படையினர் செறிவான பீரங்கித் தாக்குதலை நடத்தி வருவதால் அப்பகுதிக் கரையோர மக்கள் அவலப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர் - என்றும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். (சி)

## சிறுவரைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படும் என உறுதியளிக்கப்பட்ட போதும், இலங்கை அதிகாரிகள் அது தொடர்பாக பயனுள்ள நடவடிக்கை எதையும் எடுக்கவேயில்லை. கடத்தல்கள் தொடர்கின்றன" - என்று அந்த அறிக்கை இலங்கை அரசு மீது குற்றம் சுமத்துகின்றது. (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்! -
கடந்த 15.03.2007 வியாழக்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா நடராசா J.P.

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (30.03.2007) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் வில்லூன்றித் தீர்த்தக்கரையிலும் கிரியைகள் வீட்டிலும் நடைபெறும். நாளை (31.03.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

206/A, செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (சி-50890) - குடும்பத்தினர்.

## இலங்கை மின்சார சபை – யாழ். பிரதேச அலுவலகம்

### மின் தடை பற்றிய அறிவித்தல்

01.04.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பல்கலைக்கழகப் பிரதேசம், நல்லூர், றக்காவீதி, கச்சேரி, புங்கன்குளம், பாஷையூர், ஈச்சமோட்டை ஆகிய இடங்களில் அவசர திருத்த வேலை காரணமாக மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,சுன்னாகம். (சி/50886)

2007.03.28

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை'

## ஆறாத்துயருடன் ஐந்தாம் ஆண்டு

மலர்வு 22 ★ 02 ★ 1962



உதிர்வு 30 ★ 03 ★ 2002

### திருமதி அரசகேசரி றமிலா

வருடங்கள் ஐந்து நிமிடங்கள் போலோடி
மறைந்திட்ட போதும் - பல
வருடங்கள் இன்னும் நொடிப்பொழுதாகி
விரைந்திட்ட போதும்
திருமகளே உந்தன் திருமுகம் தன்னை
ஒருமுறை ஏனும் - உன்
அருகினில் வந்து நான் தரிசனம் காணவே
அருள் புரி அதுபோதும்.

''புஸ்பவாசா'',
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (58991) - அம்மா.

## மரண அறிவித்தல்கள்

### சிவகணேஷதாஸன் சறோஜினி (மூர்த்தி அக்கா)

கிழானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சிவகணேஷதாஸன் மற்றும் அவரது மனைவியான மாத்தளையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகணேஷதாஸன் சறோஜினி ஆகியோர் 28.03.2007 அன்று அகாலமரணமாகிவிட்டனர்.

சிவகணேஷதாஸன் அவர்கள் - நாகேந்திரம், நாகேஸ்வரி, சர்வேஷ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் சறோஜினி அவர்கள் - கணபதிப்பிள்ளை, திலகவதி, ரூபி ஆகியோரின் சகோதரியும் தர்ஷினி, சர்மிளா, சர்வானந்த் ஆகியோரின் பெற்றோரும் பவக்குமார், சிவக்குமார் ஆகியோரின் மாமன் - மாமியும் தஜீவனன், விதுஷிகா, கபிலன், தாட்சாயினி ஆகியோரின் பாட்டன் - பூட்டியுமாவார்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப.2 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவகுமார் (தம்பி-மருமகன்).

### திருமதி சபாபதி சின்னம்மா

தனங்கிளப்பு, சாவகச்சேரியை சொந்த இடமாகவும் தற்போது இடம்பெயர்ந்து நுணாவில் மேற்கு சாவகச்சேரியில் வசித்து வந்தவரான திருமதி சபாபதி சின்னம்மா நேற்று (29.03.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் அன்பு மனைவியும் நடேசு (வவுனியா), இரத்தினம், இரகுநாதன் ஆகியோரின் அன்புத் தாயும் யோகேஸ்வரி (வவுனியா), விஜயலட்சுமி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.03.2007)வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (59180) ச.இரகுநாதன்(மகன்)

## கிளிநொச்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வே.சிவனடியார் தலைமையில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில்வடக்கு-கிழக்குமனிதஉரிமைகள் செயலகப் பணிப்பாளர் எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார், கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் இ.கணேசபிள்ளை, தமிழீழ கல்வி மேம்பாட்டு கழகத் தலைவர் பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார் உட்படப் பலர் உரையாற்றினர்.

கூட்டத்தை அடுத்து ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (அ-1)


## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, பிரதான வீதியில்,
4 3/4 பரப்புக்காணி வீட்டுடன்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே. 094-11-4949234
மின்னஞ்சல்: jeeva66ss@yahoo.com

## கப்பல் சேவை

புகையிலை, சுருட்டு, வெங்காயம் ஆகியவற்றை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்ப விரும்புபவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

G.திருவருள்
KOBIRAJA TRANSPORT
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்
தொ.பே. : 0773638459 (591765)

## கப்பல், விமான பொதிகள் சேவை

கொழும்பு - யாழ்ப்பாணம்

உடனடி கப்பல், விமான பொதிகள் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பத்துக் கிலோவிற்கு (10Kg) மேற்பட்ட பொதிகளே ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு கொள்ளவும்
0773846998 (சி/50875)


## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் கனகரத்தினம்

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மலேசியாவில் வசித்தவருமாகிய சதாசிவம் கனகரத்தினம் 28.03.2007 புதன்கிழமை மலேசியாவில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.சீ.நாகரத்தினம்
(பெறாமகன்)
(கிராம உத்தியோகத்தர்)
வட்டுதெற்கு,
வட்டுக்கோட்டை.

### திருமதி கருணை ஆனந்தன் இராஜேஸ்வரி



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வாழ்விடமாகவும் பம்பலப்பிட்டி 'டிக்மன்ஸ் கோட்' ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணை ஆனந்தன் இராஜேஸ்வரி 27.03.2007 நள்ளிரவு இறைபதம் அடைந்தார்.

அன்னார் கருணைஆனந்தனின் (Auditor & Tax consultant) ஆருயிர்த் துணைவியும் திருமகள் (நோர்வே), கலைமகள், சிவமகள், கருணைராஜ்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் மகேந்[illegible]னின்(நோர்வே) மாமியும் காலஞ்செ[illegible] மெய்கண்டான் இரத்தினசபாபதி-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பண்டிதர் நடராசா-மங்கையர்க்கரசி தம்பதியரின் மருமகளும் மெய்கண்டநாதன், குமரகுருநாதன், அருணகிரிநாதன், அருள்ஜோதிநாதன், கமலாதேவி, ஞானம்பிகை, காலஞ்சென்ற விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற புனிதவதியாரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.03.2007) சனிக்கிழமை காலை 8 மணியில் இருந்து ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 4.30 மணிக்கு கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14-6/A, டிக்மன்ஸ் றோட்,
கொழும்பு 04,
தொ.பே.: [illegible]

தகவல்:
ந.கருணைஆனந்தன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### சிவசுப்பிரமணியம் நாகம்மா

தோற்றம் : 25.12.1932
மறைவு : 10.04.2006
திதி : துவாதசி (30.03.2007)

வாழ்வில் உழைத்தெம்மை
வல்ல பயிராக்கியும் - எம்
வேரெனவே நீர் இருந்தீர் - உம்மை
எந்த வேளையும் நாம் மறவோமே!

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
(சந்திரன் கடை) (59162)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 ★ 05 ★ 1917



மறைவு 25 ★ 03 ★ 2002

அமரர்
### நாகமணி நடராசா

திதி: 30.03.2007

என்றும் நீங்கா நினைவுகளுடன்...

அரியாலை,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தரும் அதி சிறப்புத் தர தலைமைப்பீட கிராம உத்தியோகத்தருமான

### ஸ்ரீபன் ஜெயபாலா செல்லத்துரை

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்
உத்தியோகத்தர்களும் பிரதேச செயலக
நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம். (59174)

## மரண அறிவித்தல்கள்

### S.J.செல்லத்துரை



(தலைமைக் காரியாலய கிராம உத்தியோகத்தர் அதிவிசேட தரம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மாட்டின் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.45, றக்கா லேன், கண்டிக்குளியை வதிவிடமாகவும் கொண்ட S.J.செல்லத்துரை நேற்று (29.03.2007)வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி மங்களேஸ்வரி செல்லத்துரை
(முகாமைத்துவ உதவியாளர், கல்வித்திணைக்களம்,
யாழ். வலயம், யா/மாநகரசபை முன்னாள் உத்தியோகத்தர்) (59179)

### கனகராசா பூமணி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா பூமணி நேற்று (29.03.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற தம்பையா கனகராசாவின் அன்பு மனைவியும் வர்ணகுலசிங்கம்(ஜேர்மனி), சத்தியமூர்த்தி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் தவமலர்(ஜேர்மனி), பத்மசோதி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் பிரசன்னா(ஜேர்மனி), சபீனா(ஜேர்மனி), ரமேஸ் (லண்டன்),மதுஜா, ஓம்பிரகாஷ், லவசியாமா, ஜனனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நடராசா சறோஜினிதேவி, மகேந்திரன், குலசேகரம் விமலாதேவி(கனடா), சிவகுமார் சகுந்தலாதேவி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (30.03.2007) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (59155)

தகவல்:
சு.மகேந்திரன்
(பெறாமகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org